***கவனிக்க.-*** *2016.07.22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*
***கவனிக்க.-*** *இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2016 ஆம் ஆண்டிற்கான பொலநறுவை நீதாசன வலயத்திற்குரிய யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1978 - 2016 ජූලි මස 29 වැනි සිකුරාදා - 2016.07.29
*1978 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *1248* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *1258* |


***கவனிக்க.-*** *அமீர் அலி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, மே மாதம் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***
***முக்கிய அறிவித்தல்கள்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, ஓகத்து 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, ஓகத்து மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பி. கே. எஸ். ரவீந்திர,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

*எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.*

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

*பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.*

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - இரத்தினபுரி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, ஆவணி மாதம் 29 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, யூலை 11.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| இரத்தினபுரி | இம்புல்பெ | பலாங்கொடை ஆதார வைத்தியசாலை பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், இரத்தினபுரி |

7-1101

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி – பதுளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, ஒகத்து மாதம் 30 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, யூலை 11.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| பதுளை | வெலிமடை | சில்மியாபுர பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், பதுளை |

7-1102

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய முஸ்லிம் விவாகப் பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, ஓகத்து மாதம் 30 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, யூலை 11.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | அக்குறணை | ஹாரிஸ்பற்று ரம்புக்கே எல பிரதேசத்தின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |
| கண்டி | அக்குறணை | அக்குறணை குருகொட பிரதேசத்தின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |
| கண்டி | அக்குறணை | ஹாரிஸ்பற்று பிரிவின் நீருல்ல பிரதேசத்தின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |

7-1103

## இலங்கைப் பொலிஸ்

பெண் உப பொலிஸ் பரிசோதகர் பதவி (சாதாரணம்)

இலங்கை பொலிஸ் சேவையில் தகுதிகாண் பெண் உப பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர், பயிலுநர் ஆட்சேர்ப்பு பிரிவு இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2016.08.29 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் இலங்கைப் பொலிஸினால் விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்.**- ரூபா 3,93,480 - 7 X 4,440 - 2 X 5,940 - 25 X 7,920 - ரூபா 6,34,440.

2016.01.01 ஆந் திகதி முதல் 2020.01.01 ஆந் திகதிவரை சம்பளம் பொது நிர்வாக சுற்றுநிருபம் இலக்கம் 3/ 2016 இன் பட்டோலை II இன் பிரகாரம் வழங்கப்படும். மேலும் 2020.01.01 முதல் முழுமையான சம்பள அளவுத் திட்டம் மேற்குறிப்பிட்டவாறு அமையும்.

மேலும், இவ்வுத்தியோகத்தர்கள் 2013.01.07 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபர் சுற்றுநிருப இலக்கம் 2416/ 2013 இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவர்களாவர். மேற்குறிப்பிடப்பட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் கொடுப்பனவுகளை மாதந்தோறும் பெறுவதற்கும் உரித்துடையவராவர் :

மேற்குறிப்பிடப்பட்ட சம்பள அளவுத்திட்டத்திற்கு மேலதிகமாக கீழ்க்காணும் கொடுப்பனவுகள் மாதந்தோறும் வழங்கப்படும் :-

(அ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு : 7,800 ரூபா ;
(ஆ) கடினக் கொடுப்பனவு : 2,000 ரூபா
(இ) இணைந்த கொடுப்பனவுகள் :
- (1) வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் சேவையின் பொருட்டு : 12,000 ரூபா
- (2) ஏனைய பிரதேசங்களில் சேவையின் பொருட்டு 9,600 ரூபா

(ஈ) வேறு கொடுப்பனவுகள் :
- (1) சீருடைகளைச் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு 250 ரூபா ;
  - (அ) இலவச போக்குவரத்து வசதிகள் ;
  - (ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளிநாடாக இருப்பினும் வைத்திய வசதிகள் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;
  - (இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;
  - (ஈ) தமது விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்வதற்கான வசதிகள் வழங்கப்படும் ;
  - (உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகளுடன், கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையாக கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.

**4. தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) *வயதெல்லை.*- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18-28 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் சேவையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்ப முடிவுத் திகதியன்று 30 வயதிற்கு உட்பட்டவர்களாக இருந்தால் அவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

(ஆ) *கல்வித் தகைமைகள்.*- க. பொ. த. (சா. தர) பரீட்சையில் கணிதம் மற்றும் தாய்மொழி உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

அத்துடன்

க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1.**- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பாட வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2.**- க.பொ. த. (சா. தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராகக் கருதப்படும்.

**குறிப்பு 3.**- விருப்பத்திற்குரிய தமிழ்/ ஆங்கிலம்/ சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்பட மாட்டாது.

(இ) *உடற் தகைமைகள் :*

* *உயரம் : 5 அடி 4 அங்குலம் (ஆகக் குறைந்தது)*

*__குறிப்பு 1.__- சிறந்த விளையாட்டுத் திறமையுடன் தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் உடற்தகைமைகள் சற்று குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின்படி தகைமை பெறுவர்.*

(ஈ) *பார்வை தொடர்பான தேவை.*- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 இற்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பினும் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(உ) *பிற தகைமைகள்.*- விண்ணப்பதாரர் திருமண மாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்து பெற்றவர்கள் விவாகமானவர்களாகக் கருதப்படுவர்). ஏனைய தகைமைகளைப் பூர்த்திசெய்த தற்போது இலங்கைப் பொலிஸில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இந்நிபந்தனை ஏற்புடைய தாகாது.

5. **ஆட்சேர்ப்பு முறை.**- தெரிவுசெய்யப்படும் விண்ணப்ப தாரிகள் அடிப்படைத் தகைமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிப் பரீட்சையில் அல்லது மனோவலிமைப் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.-

மீற்றர் 1000 - 5 நிமிடங்களும் 14 விநாடிகள்.

உடற் தகுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் இறுதி எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் :

(i) எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ள டக்கியது. அவை :

* 45 நிமிடங்களில் 500 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை பற்றிய வினாத்தாள் எழுதுதல்.

* பொது அறிவும் நுண்ணறிவும் (1 மணித்தியாலம்)

6. **மருத்துவப் பரிசோதனை :**

* விண்ணப்பதாரர் தனது நியமனத்தைப் பெற முன்னர் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். மருத்துவ பரிசோதனையானது ஆட்சேர்ப்பு செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவ பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, ஆகக்கூடிய புள்ளிகள் மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலில் அவர்களின் நிலையின் அடிப்படையிலேயே தெரிவுசெய்யப்படுவர். மருத்துவ பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

7. **பின்னணி விசாரணைகள்.**- (அ) விண்ணப்பதாரியின் நன்நடத்தையும் அவரின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். துர்நடத்தையுள்ள விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரர் பொய்யான தகவல்கள் வழங்குவது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவார்.

8. **அரச கரும மொழித் தேர்ச்சிக் கொள்கையை அமுல் படுத்துதல் :**

- பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/ 2007ஆம் இலக்க 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம், 2007.07.01 ஆந் திகதியிலிருந்து அரச சேவைக்கு/ மாகாண அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழிகளிலும் சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும்.
- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மட்ட மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.
- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கரும மொழியில் சித்தியடையாத வர்கள் குறித்த மொழியில் தேர்ச்சி அடையும்வரை சம்பள ஏற்றம் பிற்போடப்படும்.

9. **நியமனக் கொள்கைகள்.**- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/ தபுதாரர்/ அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு அங்கத்துவப் பணம் செலுத்துதல் வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகள்**.- (அ) நியமனம் 3 ஆண்டு கால தகுதிகாண் அடிப்படையில் இருக்கும்.

(ஆ)தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரச கரும மொழிக் கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள், நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவர்கள் ஆவார்கள்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்கள்.

(உ) நியமனம் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ்மா அதிபரின் அனுமதி இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய முடியாது. எனினும் 1973.02.28 ஆந் திகதிய பொலிஸ் வர்த்தமானி II இன் 41 ஆம் இலக்க அறிவித்தலுக்கு அமைய மற்றும் 2006.10.19 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபம் இலக்கம் 1952/ 2006 மற்றும் 2007.08.09 ஆந் திகதிய அச்சுற்றுநிருபத்தின் திருத்தத்தின் பிரகாரம் பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் விசேட காரணங்களைத் தெரிவித்து திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட தகுதிகாண் நிலையில் இலங்கைப் பொலிஸ் சேவையில் பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களைச் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதியானது இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை ஏற்றுக்கொள்ளலானது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் 1 ஆம் தொகுதியின் 5 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) தகுதிகாண் பெண் உப பொலிஸ் பரிசோதகர்கள் பொலிஸ் மா அதிபரின் சுற்றறிக்கை இல. 1693/ 2003 இன் பிரகாரம் பொலிஸ் விதிமுறைகளுக்கு ஏற்ப கட்டுப்பட்டு நடப்பதாக உறுதியுரை/ சத்தியப்பிரமாணம் செய்ய வேண்டும்.

(ஏ) தகுதிகாண் பெண் உப பொலிஸ் பரிசோதகர்கள் பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1804/ 2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/ சத்தியப்பிரமாணம் செய்தல் வேண்டும்.

(ஒ) தகுதிகாண் பெண் உப பொலிஸ் பரிசோதகர்கள் இலங்கை பொலிஸ் சேவையில் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவார்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இல் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ)1990.03.10 ஆந் திகதிய 15/ 90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது ஏனைய புறக் கிருத்தி செயற்பாடுகள் பற்றிய சான்றிதழ்கள் ;

(உ) தொழில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின்) ;

(ஊ) தேசிய ஆள் அடையாள அட்டையின் நிழற் பிரதி ;

13. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்ப தாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11" x 8" அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்தக் கையெழுத்தில் வேண்டப்பட்ட விபரங்களைப் பூரணப்படுத்தி சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இத்திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங்களை பிரத்தியேகமாக கையளித்தலாகாது.

14. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பொலிஸ் மா அதிபர்.

*மாதிரி விண்ணப்பப்படிவம்*

**இலங்கைப் பொலிஸ் திணைக்களம்**

*பெண் உப பொலிஸ் பரிசோதகர் பதவியில் (சாதாரணம்) சேர்த்துக்கொள்ளல்*

1. (அ)முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழில் உள்ள படியும் இருத்தல் வேண்டும்) :-----.

 (ஆ)பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

 (இ) விண்ணப்பதாரரின் பதவி :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :-----. (பிரதியை இணைக்கவும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

 பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
 மாகாணம் :-----.

5. (அ)தற்போதைய முகவரி :-----.
 (ஆ)தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் : -----.
 (இ) நிரந்தர முகவரி :-----.
 (ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
 (உ) நிரந்தர முகவரிக்குரிய தேர்தல் மாவட்டம் :-----.
 (ஊ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு : -----. பிரதேச செயலகம் :-----.
 (எ) தொலைபேசி இலக்கம் (இருப்பின்) :-----, கையடக்கத் தொலைபேசி இலக்கம் :-----.

6. (அ)தேசிய இனம் :-----.

 (ஆ)நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----

 (இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பின்வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

 (1) விண்ணப்பதாரர் :-----.
 (2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
 (3) விண்ணப்பதாரரின் தந்தை வழிப் பாட்டன் : -----.
 (4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் : -----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----. (பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

 வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

 வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா/ திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ)தற்போது செய்யும் தொழில் :-----.

 (ஆ)நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/ தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர், முகவரிகளைக் குறிப்பிடுக :-

 (i) -----.
 (ii) -----.

15. நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் அல்லது பொலிஸ் உப சேவையில் சேவை செய்துள்ளீரா ? (ஆம் எனின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக ?) :-----.

16. (அ)நீங்கள் ஆயுதப்படைதாங்கு சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

 (ஆ)நீங்கள் ஆயுத படைதாங்கு சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

17. (அ)நீங்கள் ஆயுதப் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படை தாங்கு தொண்டர் சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ)நீங்கள் ஆயுதப் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

18. நீங்கள் ஏதாவது தவறு தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறாயின் விபரம் தருக. :-----.

19. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு சம்பந்தப்பட்ட சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டுள்ளனரா அல்லது குற்றம் சுமத்தப்பட்டுள்ளனரா அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா ? அவ்வாறாயின் விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் இலங்கை பொலிஸ் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பின் எந்த சந்தர்ப்பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

20. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (தேவையேற்படின்) :

இந்த விண்ணப்பதாரி ...................................... அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப் பிக்கும் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் தெரிவிக்கிறேன்.

................,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை இடப்படல் வேண்டும்).

பதவி :-----.
திகதி :-----.

7-1071

## கடன் இணக்க சபைத் திணைக்களம்

கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத தொகுதி 2 சேவை வகுதியின் சுருக்கெழுத்தாளர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்தல் (திறந்த ஆட்சேர்ப்பு) - 2016

கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத தொகுதி 2 சேவை வகுதியின் 3 சுருக்கெழுத்தாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரிப் படிவத்திற்கமைவாக தயார்செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பின்வரும் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ "செயலாளர், கடன் இணக்க சபைத் திணைக்களம், கலாநிதி என். எம். பெரேரா மாவத்தை, கொழும்பு 10" என்னும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவு அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் சுருக்கெழுத்தாளர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்தல்" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் கோரும் இறுதித் திகதி 2016.08.29 ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பமொன்று அல்லது அது சம்பந்தப்பட்ட ஆவணமொன்று அஞ்சலில் காணாமற் போனதாக அல்லது தாமதமாகியதாக செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களைத் தாமதப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய நட்டங்களை விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

1. **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.- கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் செயலாளர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்படுகின்ற நிறுவனமொன்றினால் நடாத்தப்படுகின்ற தொழிற் பரீட்சையொன்றின் மூலம் வழங்கப்படுகின்ற புள்ளிகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர். நியமிக்கப்படுகின்ற எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின்படி தீர்மானிக்கப்படுகின்றது.

2. ஆட்சேர்ப்புச் செய்யும் தரம்.- தரம் III

3. **சேவை நிபந்தனைகள்** :

(i) இப்பதவி நிரந்தரமானது.

(ii) இப்பதவியில் நியமனம் பெறும் உத்தியோகத்தர் 3 வருட நன்னடத்தைக் காலத்துக்கு உட்படுவதுடன், அந்த 3 வருட காலத்துள் முதலாம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(iii) பொது நிர்வாகச் சுற்றறிக்கை 01/ 2014 மற்றும் அதற்கு நேரொத்த சுற்றறிக்கைகளின்படி மொழி பற்றிய தேர்ச்சி மட்டத்தை 5 வருட காலத்துக்குள்

பெற்றுக்கொள்ள வேண்டும். அரச கரும மொழியல்லாத மொழி மூலமொன்றில் சேவையில் சேர்ந்த உத்தியோகத்தர்களால் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியை நன்னடத்தைக் காலத்துள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன், மற்றைய அரச கரும மொழி பற்றிய தேர்ச்சி பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 7/2007 மற்றும் அதற்கு நேரொத்த சுற்றறிக்கைகளின்படி பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கை முறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும் திணைக்கள ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்படும்.

4. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கு 3/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின்படி எம்என்-1-2016, ரூபா 27,140 - 10 x 300 - 11 x 350 - 10 x 495 - 10 x 660 - ரூபா 45,540 மாதாந்த சம்பள அளவுத் திட்டமொன்று உரித்தாகிறது. தரங்கள் முறைக்கான ஆரம்ப சம்பளப் படிநிலை 15,924 ரூபாவாகும்.

5. **தகைமைகள் :**

(i) **கல்வித் தகைமைகள் :**

(அ) சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் ஒரு அமர்வில் ஆறு (6) பாடங்களில் கல்விப் பொதுத்தராதரப்பத்திர (சாதாரண தரம்) மற்றும் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ; மற்றும்

(ஆ) கல்விப் பொதுத்தராதரப்பத்திர (உயர் தரம்) பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரு (1) பாடத்திலாவது (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.

(ii) **தொழில் தகைமைகள்**.- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சுருக்கெழுத்து பற்றிய 6 மாதங்களுக்குக் குறையாத பாடநெறியொன்றைக் கற்றிருத்தல் அல்லது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்துப் பாடத்துக்காக திறமைச் சித்தியொன்றைப் பெற்றிருத்தல்.

(iii) **அனுபவம்**.- ஏற்புடையதாகாது.

6. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

7. **உடற் தகைமைகள்**.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவை செய்வதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியில் தகுதியுடையவராக இருக்க வேண்டும்.

8. **பிற தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரர் சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும் ;

(iii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காகத் தேவையான சகல தகைமைகளையும் பூர்த்திசெய்ய வேண்டுமென விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற அறிவித்தலில்/வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தில் அத்தகைமைகளை சகல விதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும். தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

9. **தொழில் பரீட்சை**.- கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் செயலாளரால் அல்லது அவரால் அதிகாரம் உரித்தாக்கப்படுகின்ற நிறுவனமொன்றினால் நடாத்தப்படுகின்ற பரீட்சையொன்றின் மூலம் புள்ளிகள் வழங்கப்படுகின்றன.

10. **தொழில் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படுகின்ற முறை :**

| பாடங்கள் | உயரிய புள்ளிகள் | சித்தியடையத் தேவையான புள்ளிகள் |
|---|---|---|
| சுருக்கெழுத்து | 100 | 40% |
| தட்டெழுத்து | 100 | 40% |

11. **பொது நேர்முகப் பரீட்சை**.- கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் செயலாளரால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையொன்றின் மூலம் தகைமைகள் பரீட்சித்துப் பார்க்கப்படும். (புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது)

12. **விண்ணப்பப்படிவம் :**

(i) விண்ணப்பம் 22 x 29 செ. மீ. அளவிலான A4 தாளில் தயார்செய்யப்பட வேண்டுமென்பதுடன் 1 தொடக்கம் 12 வரையிலான தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும், 13 தொடக்கம் இறுதி வரையிலான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் தயார் செய்யப்படுதல் வேண்டும். அதற்கான தகவல்களை தனது கையெழுத்தினாலேயே தெளிவாக உள்ளடக்க வேண்டும். சகல விதத்திலும் சரியாகப் பூர்த்திசெய்யப்படாதுள்ள, அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிராத உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக இல்லாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். சம்பந்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகவிருக்கும். மேலும் பூர்த்தி செய்யப்படுகின்ற

விண்ணப்பம், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இயைந்ததாக உள்ளதா என விண்ணப்பதாரரால் பரீட்சித்துப் பார்க்க வேண்டுமெனவும் அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படுமெனவும் அறிவித்துக் கொள்கிறேன்.

**விண்ணப்பங்கள் இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயார்செய்ய வேண்டும். விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.**

(ii) அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில்/ அரசாங்க கூட்டுத்தாபனங்களில் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது திணைக்கள/ நிறுவனத் தலைவரினூடாக விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

13. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கை முறை விதிகள் காலத்துக்குக்காலம் அரசாங்க சேவை தொடர்பில் வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் தொழில் நியாயசபை செயலகத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத தொகுதி 02 சேவை வகுதிக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் நிபந்தனைகள் இப்பதவிக்காக ஏற்புடையதாகின்றன.

செயலாளர்,
கடன் இணக்க சபை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீதி அமைச்சு**

கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத தொகுதி 02 சேவை வகுதியின் சுருக்கெழுத்தாளர் பதவி

இல. ........................................
(அலுவலக உபயோகத்துக்காக)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) : ----.
முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) : ----.

(ஆ) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.
முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

2. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.
3. நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
4. தொலைபேசி இல. :

5. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

6. ஆணா/ பெண்ணா ? என்பது :----.

7. பிறந்த திகதி :

ஆண்டு : மாதம் : திகதி :

8. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

9. தேசிய இனம் :----.

10. விவாகமானவரா/ விவாகமாகாதவரா என்பது :----.

11. க. பொ. த. (உயர் தரம்) பரீட்சைப் பெறுபேறுகள் :
சுட்டெண் :----.
பரீட்சையில் தோற்றிய ஆண்டு :----.

பாடம் :--------------------- சித்தி : ---------------
பாடம் :--------------------- சித்தி : ---------------
பாடம் :--------------------- சித்தி : ---------------

12. க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சைப் பெறுபேறுகள் :
சுட்டெண் :----.
பரீட்சையில் தோற்றிய ஆண்டு :----.
சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழிக்கான சித்தி :----.
கணிதத்துக்கான சித்தி :----.

பாடம் :--------------------- சித்தி : ---------------
பாடம் :--------------------- சித்தி : ---------------
பாடம் :--------------------- சித்தி : ---------------
பாடம் :--------------------- சித்தி : ---------------
பாடம் :--------------------- சித்தி : ---------------
பாடம் :--------------------- சித்தி : ---------------

13. மொழித் தேர்ச்சி (ஏற்புடையதான கூட்டினுள் ✓ அடையாளத்தை இடுக.)

| | மிகவும் நன்று | நன்று | சாதாரணம் | குறைவு |
|---|---|---|---|---|
| சிங்களம் | | | | |
| தமிழ் | | | | |
| ஆங்கிலம் | | | | |

**விண்ணப்பதாரரின் உறுதியுரை**

............................................ ஆகிய நான் இதில் குறிப்பிட்டுள்ள சகல தகவல்களும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் தெரிவித்துக்கொள்கிறேன். நான் அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டு அல்லது வினைத் திறமையின்மையின் மீது சேவையிலிருந்து ஓய்வுபெறச் செய்யப்படவில்லை எனவும், பதவிகளைக் கைவிட்டுச் சென்ற ஒருவராகக் கருதப்படவில்லை எனவும் உறுதிகூறுகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எதுவும் பொய்யானவை அல்லது பிழையானவை என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து தகுதியற்றவனாவேன் எனவும், தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து நட்டஈடு எதுவுமின்றி தொழிலிலிருந்து நீக்கப்படுவேன் எனவும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................................................... என்பவர் ......................... ஆந் திகதி தொடக்கம் ................ .............. நீதிமன்றத்தில் ............................ தொழில் நியாய சபையில் ............................... ஆக நிரந்தர/ தற்காலிக/ அமய உத்தியோகத்தர் ஒருவராக சேவை செய்கின்றார் எனவும், அவரால் மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும், சம்பந்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அவர் இதற்காக தோற்றுவதற்குத் தகைமைகள் பெற்றுள்ளார் எனவும், வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் அவர் இப்பதவிக்காகத் தெரிவுசெய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்றும் அறிவித்துக்கொள்கிறேன்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பமும்
அலுவலக முத்திரையும்.

பெயர் :----.
பதவி :----.
அமைச்சு/ திணைக்களம் :----.
திகதி :----.

7-1221

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

இஸ்லாமிய சன்மார்க்க அஹதிய்யா, அல்குர்ஆன் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை - 2015 (2016)

(பௌத்த தஹம் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குச் சமாந்தரமானது)

1. **ஒழுங்கு விதிகளும் பிரமாணங்களும்**.- மேற்படி பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதத்தில் நடாத்தப்படும். பரீட்சைக்கான பாடங்களும், பாடத்திட்டங்களும் இணைப்பு 01 இல் தரப்பட்டுள்ளன.

2. **பரீட்சை நிலையங்கள்**.- இணைப்பு 02 இல் கூறப்பட்டுள்ள நகரங்களில் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும்.

ஆயினும் ஏதாவதொரு நகரப் பரீட்சை நிலையத்திற்குப் போதிய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காதபோது குறித்த பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு அந்த நிலையத்திற்குரிய விண்ணப்பதாரிகள் அண்மையிலுள்ள வேறொரு நகரப் பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றச் செய்யப்படுவர். பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும் மாவட்டங்களும் நகரங்களும் உள்ளடக்கிய பட்டியல் இணைப்பு 02 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. **ஊடக மொழி**.- இப்பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும். எனினும் ஒரு பரீட்சார்த்தி, தான் தோற்றும் சகல பாடங்களுக்கும் இவற்றுள் யாதேனும் ஒரு மொழி மூலம் மட்டுமே தோற்ற முடியும்.

4. **தகைமைகள்**.- இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளில் ஏதேனுமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4.1 முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில், பதிவு செய்யப்பட்ட அஹதிய்யாப் பாடசாலையொன்றில் 10 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களாயிருத்தல்.

அல்லது

4.2 முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால், அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட தர அல்குர்ஆன் மத்ரஸா பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்த மாணவராயிருத்தல்.

அல்லது

4.3 இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இஸ்லாம் அல்லது அரபு பாடத்தில் சித்தியடைந்தவர்களாகவிருத்தல்.

**குறிப்பு**.- (1) இப்பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும், மேலே 4 ஆவது பிரிவில் குறிப்பிடப் பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ளாரென அஹதிய்யாப் பாடசாலையின் அதிபர் அல்லது சிரேஷ்ட அல்குர்ஆன் மத்ரஸா அதிபர் அல்லது பாடசாலை அதிபரினால் உறுதிப் படுத்தப்படல் வேண்டும்.

(2) பரீட்சார்த்தி ஒருவர் இப்பரீட்சைக்குப் பதிவு செய்யப்பட்ட அஹதிய்யாப் பாடசாலை அல்லது சிரேஷ்ட அல்குர்ஆன் மத்ரஸா அல்லது பாடசாலை அதிபர் மூலமே விண்ணப்பிக்க முடியும்.

5. பதிவு செய்யப்பட்ட சகல அஹதிய்யாப் பாடசாலைகள், சிரேஷ்ட குர்ஆன் மத்ரஸாக்கள், மத்ரஸா பாடசாலைகள் என்பவற்றிற்கு விண்ணப்பப் பத்திரங்களும், அறிவுறுத்தல்களும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பப்பத்திரங்களும், அறிவுறுத்தல்களும் கிடைக்கப்பெறாத நிறுவனங்கள், "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு 2016, ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் :

5.1 விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் தயாரிக்கப் பட்டு மூலப்பிரதியினைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புவதோடு, மற்றைய பிரதியினைக் குறிப்பிட்ட நிறுவனத்தில் கோவைப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும்.

5.2 விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2016, ஓகத்து மாதம் 26 ஆந் திகதி ஆகும்.

5.3 விண்ணப்பப்படிவங்கள் தெளிவாகவும், பிழைகளின்றி யும் பூரணப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்களும், இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

5.4 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை பதிவுத் தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்:-

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

5.5 விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

5.6 விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இஸ்லாமிய சன்மார்க்க அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சை 2015 - (2016)" எனவும், பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் நகரமும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

5.7 விண்ணப்பங்களோடு எவ்வித சான்றிதழையும் இணைத்து அனுப்பக்கூடாது. அஹதிய்யாப் பாடசாலையின் அல்லது சிரேஷ்ட குர்ஆன் மத்ரஸாவின் அதிபர் அல்லது பாடசாலை அதிபர் விண்ணப்பதாரி குறித்த தகைமையைப் பெற்றுள்ளார் என்பதை உறுதிப்படுத்தி இருத்தல் வேண்டும்.

6. **பரீட்சைக் கட்டணம் செலுத்தும் முறை** :

6.1 இப்பரீட்சைக்கு முதற்தடவையாகத் தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது. அதன் பின்னர் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு கட்டணம் ரூபா 150 ஆகும். நூன சித்தியை பூரணப்படுத்துவ தற்கான பாடத்திற்கு பரீட்சைக் கட்டணமாக 50 ரூபா செலுத்துதல் வேண்டும்.

6.2 பரீட்சைக் கட்டணம் செலுத்தவேண்டிய பரீட்சார்த்தி களுக்கான முழுத்தொகையை இலங்கையின் எந்தவொரு அஞ்சலகத்திலாவது செலுத்திப் பெறப்படும் பற்றுச் சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியொன்றினை வைத்திருத்தல் பயனுடையது.)

7. **அனுமதி அட்டைகள்**.- பரீட்சை அனுமதி அட்டைகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் உரிய அஹதிய்யா பாடசாலை அதிபர் அல்லது மத்ரஸா அதிபர் அல்லது பாடசாலை அதிபருக்கு விநியோகிக்கப்படும். அதிபரினால் அவ்வனுமதி அட்டைகள் உரிய பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

7.1 ஏதாவதொரு பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் ஆரம்ப தினத்திலேயே பரீட்சை அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கத் தவறும்பட்சத்தில் அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலல்லாது வேறொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்ற எத்தனிக்கும் பட்சத்தில் உரிய பரீட்சார்த்தியின் பரீட்சார்த்தித் தகவு இரத்துச் செய்யப்படும்.

7.2 அனுமதி அட்டையிலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பம் அஹதிய்யாப் பாடசாலை அதிபர், குர்ஆன் மத்ரஸா அதிபர், பாடசாலை அதிபர், அரபுக் கல்லூரி அதிபர், வருடமொன்றிற்கு ரூபா 2,40,360 இற்கு மேல் திரட்டிய வருடாந்த சம்பளத்தைப் பெறும் நிரந்தர அரச சேவை உத்தியோகத்தர், மஸ்ஜிதுக்குப் பொறுப்பான இமாம் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு ஏழு (7) தினங்களுக்கு முன்னர் அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத சந்தர்ப்பத்தில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த, அஹதிய்யாப் பாடசாலை, குர்ஆன் மத்ரஸா, பாடசாலை என்பவற்றின் அதிபர்கள் இது தொடர்பாகப் பரீட்சைகள் ஆணையாளர்

நாயகத்திற்கு அறிவிக்க வேண்டும். அத்தகைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கீழ்வரும் விடயங்கள் தெரிவிக்கப்படுதல் வேண்டும் :-

(அ) பரீட்சையின் பெயர் :-----.

(ஆ) அஹதிய்யாப் பாடசாலை/ குர்ஆன் மத்ரஸா/ அரசாங்கப் பாடசாலையின் பெயரும் கணினி இலக்கமும் :-----.

(இ) பரீட்சார்த்தியின் முழுப் பெயரும் விலாசமும் : -----.

(ஈ) பரீட்சைக்கு விண்ணப்பித்த நகரம் :-----.

(உ) விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த தபால் நிலையம் :-----.

(ஊ) பதிவு செய்த இலக்கமும் திகதியும் :-----.

8. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**.- சகல பரீட்சார்த்திகளும் தாம் பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் ஏற்றுக் கொள்ளத்தக்கவாறு தமது ஆளடை யாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்கென கீழ்க்குறிப்பிடப்பட்ட அடையாள அட்டைகளில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

8.1 ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்கள ஆணை யாளரினால் வழங்கப்படும் தேசிய ஆளடையாள அட்டை ;

8.2 செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;

8.3 அஞ்சல் அடையாள அட்டை.

9. **பரீட்சை முடிவுகளை வெளியிடலும், சித்தி பெற்றமையைத் தீர்மானித்தலும் :**

9.1 இப்பரீட்சைக்குரிய பாடங்கள் நான்கு ஆகும். குறித்த நான்கு பாடங்களிலும் சித்தியடையும் பரீட்சார்த்திகள் மட்டும் இப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகக் கருதப்படுவர்.

9.2 ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்று ஒரு பாடத்தில் மட்டும் சித்தி பெறத்தவறுவோர் நூன சித்தி பெற்றவராகக் கருதப்படுவார். அவர்கள் அடுத்துவரும் இரண்டு பரீட்சைத் தவணைகளுக்குள் நூன சித்திப் பாடத்திற்கு மாத்திரம் தோற்றி சித்தி பெற்றால், பரீட்சையில் சித்தி பெற்றவராகக் கணிக்கப்படுவர். (இது 2011 ஆம் ஆண்டுக்குரிய பரீட்சை முதல் நடைமுறைப் படுத்தப்படும்.)

9.3 ஒவ்வொரு பாடத்திற்கும் 100 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். ஒவ்வொரு பாடத்திற்கும் பெறப்படும் புள்ளிகள் கீழ்க்குறிப்பிட்டவாறு தரப்படுத்தப்படும் :-

| புள்ளி மட்டம் | தரம் | குறியீடு |
|---|---|---|
| 0 - 34 | சித்தியின்மை | F |
| 35 - 54 | சாதாரண சித்தி | S |
| 55 - 69 | திறமைச் சித்தி | C |
| 70 - 100 | விசேட சித்தி | D |

9.4 *பரீட்சை முடிவுகளை வெளியிடல்*.- பரீட்சை முடிவுகளைப் பற்றிய விபரங்கள் உரிய நிறுவனங்களது அதிபர்களுக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

10. **சான்றிதழ்**.- பரீட்சையில் சித்திபெறும் ஒவ்வொரு பரீட் சார்த்திக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

11. **விடைத்தாள் மீள்பரிசீலனை**.- பரீட்சை முடிவுகள் வெளியாகி 30 நாட்களுக்குள் இத்திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் படிவங்கள் மூலம் குறிப்பிட்ட நிறுவனத்தின் அதிபர் விண்ணப்பஞ்செய்தால் விடைத்தாள்களை மீள் பரிசீலனை செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும். எனினும், இதற்கு உரிய கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். பரீட்சை முடிவுகளில் மாற்றம் ஏற்படும் பட்சத்தில் மாத்திரமே கட்டணம் மீளளிக்கப்படும். எக்காரணம் கொண்டும் விண்ணப்பதாரிக்கோ அல்லது அவரது பிரதிநிதிக்கோ விடைப்பத்திரங்களைப் பார்வையிடுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

12. இங்கு குறிப்பிடப்படும் நிபந்தனைகள், அறிவுறுத்தல் களுக்கமைய நடந்து கொள்வதற்கு எல்லா விண்ணப்பதாரிகளும் கட்டுப்பட்டுள்ளதோடு, இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்களிருப்பின் அவை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிவுக்கேற்பத் தீர்மானிக்கப்படும்.

டபிள்யூ. எம். என். ஜே. புஷ்பகுமார,
பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

ஒழுங்கமைப்பு, வெளிநாட்டு பரீட்சைகள் கிளை,
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2016.

***இணைப்பு - 1***

**பரீட்சைக்கான பாடங்களும், பாடத்திட்டமும்** :- இப்பரீட்சையின் ஒவ்வொரு வினாத்தாள்களும் மூன்று மணித்தியாலங்களைக் கொண்ட நான்கு வினாப்பத்திரங் களையுடையதாகும். வினாப்பத்திரங்களின் கட்டமைப்பும்,

வினாக்களுக்கான புள்ளி ஒதுக்கீடும் 2004.09.10 ஆந் திகதிய 1358 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கேற்றவாறு அமைந்திருக்கும்.

*முதலாம் வினாப்பத்திரம்*

1. **அகீதாவும், ஷரீஆவும் (இஸ்லாமிய கோட்பாடும் மூலாதாரங்களும் அரபு மொழியும்)**

1.1 அகீதா பொது விளக்கம் (அல் இலாஹிய்யாத், அந்நுபுவ்வத், அர்ரூஹானிய்யாத், அஸ்ஸம்இய்யாத்)

1.2 அகீதாவின் பிரிவுகள்
- அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தின் அகீதா
- ஏனைய அகீதாப் பிரிவுகளிற் சில ஜபரிய்யா, கதரிய்யா, முர்ஜியா முஃதஜிலா, ஷீஆ

1.3 தௌஹீதும், ஷிர்க்கும்
- ஈமானும், குப்றும்
- ரித்தத், நிபாக்
- அல்குர்ஆன் அருளப்பட்டு தொகுக்கப்பட்ட வரலாறு
- சட்ட மூலாதாரம் என்ற வகையில் அல்குர்ஆனின் பயன்பாடு
- ஸுன்னாவின் தோற்றமும் தொகுக்கப்பட்ட வரலாறும்
- சட்ட மூலாதாரம் என்ற வகையில் ஸுன்னாவின் பயன்பாடு
- ஹதீஸ் கலை வரலாறும் பிரதான முஹத்திஸ்களின் பங்களிப்புகளும்
- இஜ்திஹாத் பற்றிய விளக்கம்
- துணை மூலாதாரம் என்ற வகையில் இஜ்மா
- துணை மூலாதாரம் என்ற வகையில் கியாஸ்
- பிக்ஹுடைய வரலாறும் பிரதான இமாம்களும்

1.4 அரபு மொழி
- உறுப்பமைய எழுதுதல்
- சிறு வாக்கியங்களை எழுதுதல்
- இஸ்லாம் பாடத்துடன் தொடர்புடைய அரபுச் சொற்களை எழுதுதல்
- முக்கியமான ஸூறாக்களையும், ஆயத்துக் களையும், ஹதீஸ்களையும் பிழையின்றி எழுதுதல்.

***இரண்டாம் வினாப்பத்திரம்***

2. **அல் பிக்ஹுல் இஸ்லாமி (இஸ்லாமிய சட்டநெறி)**

2.1 இபாதத் பற்றிய விளக்கம்
- இபாதத்தின் பிரிவுகள்
- தஹாரத்

2.2 நஜீஸும் அதன் வகைகளும்
- நஜீஸை சுத்தப்படுத்தும் முறை
- நீரும் அதன் வகைகளும்
- வுழூ, தயம்மும், குளிப்பு பற்றிய நடைமுறை ஒழுங்குகள்

2.3 ஸகாத்
- முக்கியத்துவம்
- விதி முறைகள்
- திரட்டலும் விநியோகமும்
- ஸகாத் மூலம் வறுமைத்தணிப்பும், செல்வப்பங்கீடும்

2.4 நோன்பு
- முக்கியத்துவம்
- விதிமுறைகளும் பயனும்

2.5 ஹஜ்
- முக்கியத்துவம்
- விதிமுறைகளும் பயனும்

2.6 ஹஜ்: நிறைவேற்றும் முறை
- பர்ளுகள், வாஜிபுகள், சுன்னத்துகள்
- பர்ளான ஹஜ்ஜுக்கு மேலதிகமாக செய்யும் ஹஜ்கள்

2.7 இஸ்லாத்தில் உணவு, உடை, உறையுள் பற்றிய கண்ணோட்டமும் நடைமுறைகளும்

2.8 ஜிஹாத் பற்றிய விளக்கம்

2.9 குர்பானிகளும் அறுப்பு முறைகளும்

2.10 சத்தியம் செய்தலும் நேர்ச்சையும்

2.11 முஆமலாத் பற்றிய விளக்கம்
- உழைப்பின் முக்கியத்துவம்
- பிரதான கொடுக்கல் வாங்கல் (வியா பாரம்) ஏனைய கொடுக்கல் வாங்கல் (உ+ம்: இரவல், வாடகை)
- வக்பு, வஸிய்யத், வராஸத் (பொதுச் சொத்து, உயில் சொத்து, வாரிசுச் சொத்து)

2.12 இஸ்லாத்தில் ஆண், பெண் நிலை
- நிகாஹின் விதிமுறைகளும் பயனும்
- குடும்ப வாழ்வு
- கணவன்-மனைவி
- பெற்றோர் - பிள்ளை உரிமைகளும், கடமைகளும்
- தலாக்கும் இத்தாவும்

2.13 ஜினாயத்
- ஹுதூத், கிஸாஸ், தஃஸீர்

***மூன்றாம் வினாப்பத்திரம்***

3. **ஸீறாவும் தாரீகும்**

3.1 இஸ்லாத்துக்கு முந்திய அரபு நாட்டின் சமய சமூக நிலை

3.1.1 நபி (ஸல்) அவர்கள்

- நுபுவத்திற்கு முந்திய வாழ்க்கை
  * குடும்பம், பரம்பரை
  * இளமைப்பருவம்
  * நற்குணம்
  * திருமணம்

- நுபுவ்வத்துக்கும் ஹிஜ்ரத்திற்கும் இடையிலான வாழ்க்கை
  * நுபுவ்வத் கிடைத்தல்
  * இஸ்லாமிய பிரச்சாரங்களும் விளைவுகளும்
  * மிஃராஜ்
  * ஹிஜ்ரத்

- மதீனா வாழ்க்கை
  * சமூக அரசியல் செயற்பாடு
  * தற்காப்பு யுத்தங்களும், சமாதான உடன்படிக்கைகளும்
  * இஸ்லாம் பூரணத்துவம் பெறல்.
  * ஸஹாபாக்களின் அந்தஸ்தும் இஸ்லாத்திற்கான அவர்களது பங்களிப்பும்
  * குலபாஉர்ராஷிதீன்கள் வரலாறும், அரசியல் பங்களிப்பும்
  * உமையா, அப்பாசிய ஆட்சிக்காலம்
  * பைத்துல் முகத்தஸ் - வரலாறு
  * இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் பங்களிப்பும்
  * முஸ்லிம்களின் அறிவியல் பங்களிப்பு
  * பின்வருவோர் பற்றிய வரலாறு
    * இமாம் புகாரி (ரஹ்)
    * இமாம் ஷாபிஈ (ரஹ்)
    * இமாம் கஸ்ஸாலி (ரஹ்)
    * இமாம் அப்துல் காதி ஜீலானி (ரஹ்)
    * இமாம் ஷாதுலி (ரஹ்)

***நான்காம் வினாப்பத்திரம்***

**4. அக்லாக் - (இஸ்லாமிய ஒழுக்கவியல்)**

4.1 அக்லாக் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டம்

* அக்லாக் பற்றிய விளக்கம்
* ஈமானுக்கும் அக்லாக்குக்கும் இடையிலான தொடர்பு
* அக்லாக்குக்கும் இபாதத்திற்கும் இடையிலான தொடர்பு
* உளத்தூய்மை (இஃலாஸ்)

4.2 தக்வா

* வரஉ, ஸுஹ்த்
* முராகபா, முஹாஸபா
* ஷவ்க் (இறையன்பு)

4.3 ஈகை

* தியாகம்
* நன்றியுணர்வு
* பொறுமை - சகிப்புத்தன்மை - விட்டுக் கொடுத்தல் - மன்னித்தல்
* பணிவு
* நேரம் பேணுதல்
* அவையவங்களைப் பேணுதல்-நாவு, கண், காது, பாலுறுப்பு
* பிறரை மதித்தல்
* நீதியும் நேர்மையும்
* இளைஞர், யுவதிகளிடம் காணப்பட வேண்டிய சிறப்பான ஒழுக்கப் பண்புகள்
* ஏனைய சமயத்தவர்களுடன் இணங்கி வாழ்தல்

4.4 இஸ்லாமிய நீதிமுறை

***இணைப்பு - 2***

**குறித்த மாவட்டங்களில் பரீட்சை நிலையங்கள் ஏற்படுத்தப்படவுள்ள நகரங்களும் நகர இலக்கங்களும்**

| நகரம் | நகர இல. | மாவட்ட இல. |
|---|---|---|
| **கொழும்பு மாவட்டம்** | | 01 |
| கொழும்பு (மத்தி) | 01 | |
| பம்பலப்பிட்டி | 02 | |
| **கம்பஹா மாவட்டம்** | | 02 |
| திஹாரிய | 03 | |
| மாபோலை | 04 | |
| மல்வானை | 05 | |
| நீர்கொழும்பு | 06 | |
| கல்எலிய | 07 | |
| **களுத்துறை மாவட்டம்** | | 03 |
| பாணந்துறை | 08 | |
| களுத்துறை | 09 | |
| அளுத்கம | 10 | |
| **காலி மாவட்டம்** | | 04 |
| காலி | 11 | |
| **மாத்தறை மாவட்டம்** | | 05 |
| வெலிகமை | 12 | |
| மாத்தறை | 13 | |
| **அம்பாந்தோட்டை மாவட்டம்** | | 06 |
| அம்பாந்தோட்டை | 14 | |

| *நகரம்* | *நகர இல.* | *மாவட்ட இல.* |
|---|---|---|
| **கேகாலை மாவட்டம்** | | *07* |
| *மாவனல்லை* | *15* | |
| *வரகாபொலை* | *16* | |
| *கன்னத்தோட்டை* | *17* | |
| **குருநாகல் மாவட்டம்** | | *08* |
| *குளியாபிட்டி* | *18* | |
| *குருநாகல்* | *19* | |
| *மெல்சிறிபுர* | *20* | |
| *பொல்கஹவெல* | *21* | |
| *கெகுனாகொல்ல* | *22* | |
| **புத்தளம் மாவட்டம்** | | *09* |
| *நுரைச்சோலை* | *23* | |
| *புத்தளம்* | *24* | |
| *சிலாபம்* | *25* | |
| **அநுராதபுர மாவட்டம்** | | *10* |
| *அநுராதபுரம்* | *26* | |
| *கெக்கிராவை* | *27* | |
| *கலென்பிந்துனுவெவ* | *28* | |
| **பொலநறுவை மாவட்டம்** | | *11* |
| *கதுறுவெல* | *29* | |
| **மாத்தளை மாவட்டம்** | | *12* |
| *மாத்தளை* | *30* | |
| **கண்டி மாவட்டம்** | | *13* |
| *கண்டி* | *31* | |
| *நாவலப்பிட்டி* | *32* | |
| *தெல்தொட்டை* | *33* | |
| *கெலி ஓயா* | *34* | |
| **நுவரெலியா மாவட்டம்** | | *14* |
| *நுவரெலியா* | *35* | |
| **இரத்தினபுரி மாவட்டம்** | | *15* |
| *எஹலியகொடை* | *36* | |
| *பலாங்கொடை* | *37* | |
| **பதுளை மாவட்டம்** | | *16* |
| *பதுளை* | *38* | |
| *வெலிமடை* | *39* | |
| **மொனராகலை மாவட்டம்** | | *17* |
| *பிபிலை* | *40* | |
| **அம்பாறை மாவட்டம்** | | *18* |
| *அக்கரைப்பற்று* | *41* | |
| *பொத்துவில்* | *42* | |
| *கல்முனை* | *43* | |
| *சம்மாந்துறை* | *44* | |
| *இறக்காமம்* | *45* | |
| *நிந்தவூர்* | *46* | |
| *ஒலுவில்* | *47* | |
| **மட்டக்களப்பு மாவட்டம்** | | *19* |
| *காத்தான்குடி* | *48* | |
| *ஏறாவூர்* | *49* | |
| *வாழைச்சேனை* | *50* | |
| **திருகோணமலை மாவட்டம்** | | *20* |
| *மூதூர்* | *51* | |
| *கிண்ணியா* | *52* | |
| *திருகோணமலை* | *53* | |
| **வவுனியா மாவட்டம்** | | *21* |
| *வவுனியா* | *54* | |
| **மன்னார் மாவட்டம்** | | *22* |
| *மன்னார்* | *55* | |
| **முல்லைத்தீவு மாவட்டம்** | | *23* |
| *முல்லைத்தீவு* | *56* | |
| **கிளிநொச்சி மாவட்டம்** | | *24* |
| *கிளிநொச்சி* | *57* | |
| **யாழ்ப்பாண மாவட்டம்** | | *25* |
| *யாழ்ப்பாணம்* | *58* | |

*7-1132*

---

### சட்டமா அதிபர் திணைக்களத்தின் சுருக்கெழுத்தாளர் III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016

சட்டமா அதிபர் திணைக்களத்தின் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தகுதிவாய்ந்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

(அ) சுருக்கெழுத்தாளர் III ஆம் வகுப்பின் சிங்கள மொழிமூலப் பதவிகள் - 14

(ஆ) சுருக்கெழுத்தாளர் III ஆம் வகுப்பின் ஆங்கில மொழிமூலப் பதவிகள் - 11

(இ) சுருக்கெழுத்தாளர் III ஆம் வகுப்பின் தமிழ் மொழிமூலப் பதவிகள் - 2

2. **விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல்.-** இவ்வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப ஏ4 அளவிலான (செ. மீ. 21 x 29) தாள்களின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பதாரியினால் விண்ணப்பப்படிவம் தயார்செய்யப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் 1 இல்

இருந்து 3 வரை முதலாம் பக்கத்திலும் 4 இல் இருந்து 8 வரை இரண்டாம் பக்கத்திலும் மிகுதி மூன்றாம் பக்கத்திலும் அடங்கும் வண்ணம் தயாரிக்கப்பட்டு அதனோடு தொடர்பான தகவல்கள் தனது சொந்தக் கையெழுத்திலேயே தெளிவாக நிரப்பப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப அமையாத விண்ணப்பங்களும் முழுமைபெறாத தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். மேலும் விண்ணப்பப்படிவத்தை தயார் செய்யும்போது விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் அவசியம். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2016.08.25 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "சட்டமா அதிபர், சட்டமா அதிபர் திணைக்களம், த. பெ. இலக்கம் 502, கொழும்பு 12" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(அ) விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்படும்போது "சுருக்கெழுத்தாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2016" என விண்ணப்பங்கள் உறையிடப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.

(ஆ) அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில் கடமை புரியும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக உரிய திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பப்படிவமோ அதனோடு தொடர்பான வேறு ஆவணங்களோ தபாலில் தொலைந்துள்ளதாகவோ தாமதமடைந்த தாகவோ முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

(ஈ) உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாகாத, முழுமைபெறாத மற்றும் தாமதித்துக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

3. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர், திருப்திப்படக்கூடிய விதத்தில் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தில் தனது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இந்நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களுள் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

4. **போலியான தகவல்கள்**.- விண்ணப்பப்படிவங்கள் பூர்த்திசெய்யப்படும்போது மிக அவதானத்துடன் சரியான தகவல்கள் வழங்கப்படல் வேண்டும். எவரேனுமொரு பரீட்சார்த்தி தகைமையற்றவரென தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் பரீட்சை நடைபெறும்போது, பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது வேண்மர் நிலை நீக்கப்படும். பரீட்சார்த்தி ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனுமொரு தகவல் எச்சந்தர்ப்பத்திலேனும் பொய்யானதென தெரியவருமிடத்து அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப் படுவார்.

5. **இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம்**.- பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 06/ 006 (iv) இற்கு ஏற்ப எம்என்ஜ-2006(ஏ) ரூ. 13,120-10X145-11X170-10X240-10X320- ரூ. 22,040 ஆவதுடன் இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமையவே சம்பளம் வழங்கப்படும். பதவியில் அமர்த்தப்பட்டதன் பின்னர் நான்காவது சம்பளப்படி நிலையை எட்டுவதற்கு முன்னர் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். (பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 3/ 2016 இன் பிரகாரம் இந்தச் சம்பளத் திட்டமானது மாற்றத்துக்கு உட்படுத்தப்படுகிறது.)

6. **பரீட்சைக் கட்டணம்**.- இப்பரீட்சைக்கான கட்டணம் 500 ரூபா ஆகும். இப்பரீட்சைக் கட்டணம் "சட்டமா அதிபர்" பெயரில் இலங்கை வங்கியின் தப்ரபேன் கிளையில் கணக்கிலக்கம் 0007041486 இல் வைப்புச்செய்து பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டினுள் ஒட்டுதல் (வழங்கிய வங்கிக் கிளை, இலக்கம் மற்றும் திகதி என்பவற்றைக் குறிப்பிட்டு) வேண்டும். செலுத்தப்படும் பரீட்சைக் கட்டணம் எக்காரணம் கொண்டும் திருப்பி கொடுக்கப்பட மாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாயமையும்.

7. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்கு குறையாத மற்றும் 30 வயதிற்கு மேற்படாதவராயிருத்தல் வேண்டும்.

8. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய சம்பளம் கொண்டது. விதவைகள் தபுதாரர் ஓய்வூதிய சம்பள நிதியத்திற்குப் பங்களிப்புத் தொகையினைச் செலுத்துதல் வேண்டும். நியமனம் மூன்று (03) வருடகால தகுதிகாண் காலத்திற்குட்படுத்தப்படும். 2009.02.20 ஆந் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 1589/ 30 ஆம் இலக்க ஆட்சேர்ப்புத்திட்ட விதிக்கோவை ஏற்பாடுகள் ஏற்புடையதாகும் ;

(ii) அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவியொன்றில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் தெரிவுசெய்யப்படுமிடத்து அவர் ஒரு வருடம் பதில் கடமைக்குட்படுத்தப்பட்டு நியமிக்கப்படுவர்.

(iii) பொது நிர்வாகச் சுற்றறிக்கை 07/ 2007 மற்றும் அதற்கு இடைநேர்விளைவான சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப குறித்த தரத்திலான மொழித்திறனை குறிப்பிட்ட காலத்திற்குள் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(iv) கொழும்பு 12, சட்டமா அதிபர் திணைக்களத்தில் கடமை புரிதல் வேண்டும்.

9. (i) **கல்வித் தகைமைகள்**.- (அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம் மற்றும் சிங்களம்/ ஆங்கிலம்/ தமிழ் மொழிகள் உள்ளடங்கலாக 4 பாடங்களில் ஆகக்குறைந்தது திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;

அத்துடன்

(ஆ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தர) பரீட்சையில் (புதிய பாடத்திட்டத்தின்கீழ் சாதாரண பொதுப் பரீட்சை மற்றும் சாதாரண ஆங்கிலம் தவிர்ந்த) ஆகக்குறைந்தது ஒரு பாடத்திலேனும் சித்தியடைந்திருததல் :

(ii) **தொழில் தகைமைகள்**.- மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து தொடர்பான 6 மாதத்திற்குக் குறையாத பாடநெறியினை விண்ணப்பிக்கும் பதவி தொடர்பில் குறித்த மொழி மூலத்தில் பூர்த்திசெய்திருத்தல் ;

(iii) **அனுபவம்**.- (அ) நீதிமன்றமொன்றில்/ தொழில் நியாய சபையொன்றில் ஆறு மாதத்திற்கு (06) குறையாத ஒரு காலத்திற்கு சமயாசமய, ஒப்பந்த அல்லது பயிலுநர் சுருக்கெழுத்தாளர் ஒருவராக கடமையாற்றியிருத்தல் ;

அல்லது

(ஆ) அரச அங்கீகாரம்பெற்ற நிறுவனமொன்றிலிருந்து ஆறு மாத காலத்திற்கு (06) குறையாத பிரயோகப் பயிற்சியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

10. விண்ணப்பதாரிகள் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை தேவையான சந்தர்ப்பத்தில் சமர்ப்பிப்பதற்குத் தயார் நிலையில் வைத்திருத்தல் வேண்டும் :

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ்கள் ;
(iii) அண்மையில் பெற்றுக்கொண்ட நற்சான்றிதழ்கள் இரண்டு.

11. **நியமனத்திற்காக ஆட்சேர்க்கப்படும் முறை**.- இவ் ஆட்சேர்ப்பிற்கான திறந்த போட்டிப் பரீட்சை எழுத்துப் பரீட்சை ஒன்றையும் தொழில் ரீதியான பரீட்சையொன்றையும் உள்ளடக்கியுள்ளது. ஆரம்பத்தில் எழுத்துப் பரீட்சை நடைபெறுவதுடன் அதில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் நாற்பது சதவீத (40%) புள்ளிகளை அல்லது அதற்கு மேல் பெற்றுக்கொள்ளல் வேண்டும். சித்தியடையும் விண்ணப்பதாரர்களுள் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்ற வரிசைக் கிரமத்திற்கு ஏற்ப வெற்றிட எண்ணிக்கையின் இரண்டு மடங்கு தொழில் ரீதியான பரீட்சைக்கு அழைக்கப்படுவர். தொழிற் பரீட்சையிலும் நாற்பது வீத (40%) புள்ளிகளை அல்லது அதற்கு மேல் பெற்றுக்கொள்ளும் பரீட்சார்த்திகளுள் அவர்களது மொத்த புள்ளிகளின் கூட்டுத்தொகைக்கு ஏற்ப திறமை அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர். (இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகைமைகளும் கட்டாயம் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.)

(i) விண்ணப்பதாரர்கள் தாம் விண்ணப்பிக்கும் பதவிக்கான மொழி மூலத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். (உ-ம் : ஆங்கில மொழி மூலத்திற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் ஆங்கில மொழியிலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.) விண்ணப்பிக்கும் மொழி மூலத்தினை மாற்றுவதற்கு பின்னர் இடமளிக்கப்பட மாட்டாது.

(ii) சிங்கள மொழி மூல விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகளின் திறமையின் அடிப்படையில் சிங்கள மொழி மூல பதவிக்கும் ஆங்கில மொழி மூல விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகளின் திறமையின் அடிப்படையில் ஆங்கில மொழி மூல பதவிக்கும், தமிழ் மொழி மூல விண்ணப்பதாரர்களின் மொத்த புள்ளிகளின் திறமையின் அடிப்படையில் தமிழ் மொழி மூல பதவிக்கும் நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

(iii) இப்பரீட்சை 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

12. **தெரிவுசெய்யப்படும் முறை** :

12.1 எழுத்துப் பரீட்சை :

| | வினாப் பத்திரம் | காலம் | புள்ளிகள் |
|---|---|---|---|
| (i) | பொது விவேகம் | 02 மணித்தியாலம் | 100 |
| (ii) | பொது அறிவு | 02 மணித்தியாலம் | 100 |

(i) பொது விவேகம்.- சொற்றொகுதிகள் மற்றும் உருவங்கள் என்ற வகையில் சமர்ப்பிக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பாக பரீட்சார்த்திகளின் தீர்வு

மற்றும் பதில் குறி என்பன மூலம் அப்பிரச்சினைகள் தொடர்பான கருத்து விளக்கம், நிறுவுதல் மற்றும் நேரத்திற்கும் பரப்பிற்குமிடையிலான தொடர்பினால் புரிந்துகொள்ளல் என்பன பற்றி பரீட்சார்த்தி தான் கொண்டுள்ள பொது வான விவேகம், தர்க்கத் திறமை, கருத்து வெளியிடல், கணிப்பீட்டுத் திறமை மற்றும் புரிந்துகொள்ளும் திறமை என்பவற்றை மதிப்பீடு செய்தல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

(ii) பொது அறிவு.- தேசிய, பிராந்திய மற்றும் உலகின் பல்வேறு அமைப்புச் சூழல் மற்றும் எமது சமுதாயத்தில் காணப்படும் சமூக, கலாச்சார, கல்வி, அரசியல், பொருளாதார மற்றும் அதனுடன் தொடர்புடைய வேறு காரணிகள் தொடர்பிலும், எழுத்துரு வடிவு, இலக்கண விதிகளை கையாளும் முறை, பிழையின்றி தெளிவான கருத்தினை வெளியிடல் தொடர்பான அறிவு, சாராம்சம் செய்தல் மற்றும் கட்டுரைகள் எழுதும் ஆற்றல் என்பவற்றை அளவிடும் பரீட்சையாகும்.

12.2 தொழிற் பரீட்சை :

| | வினாப் பத்திரம் | புள்ளிகள் | தேர்ச்சிப் புள்ளி |
|---|---|---|---|
| (i) | சிங்களம்/ தமிழ் சுருக்கெழுத்து | 100 | 40 |
| (ii) | ஆங்கில சுருக்கெழுத்து | 100 | 40 |

(i) சிங்களம்/ தமிழ் சுருக்கெழுத்து

(அ) ஐந்து (5) நிமிடத்தினுள் தொடர்ச்சியாக வாசிக்கப்படும் பந்தியொன்றை நிமிடத்துக்கு 70 சொற்கள் என்ற வேகத்தில் சுருக்கெழுத்திட்டு அக்குறிப்பை நிமிடத்துக்கு 8 சொற்கள் என்ற வேகத்தில் தட்டெழுத்துச் செய்தல் வேண்டும் ;

மற்றும்

(ஆ) நிமிடத்துக்கு 30 சொற்கள் என்ற வேகத்தில் 20 நிமிடங்கள் தட்டெழுத்து செய்தல்

(ii) ஆங்கில சுருக்கெழுத்து

(அ) ஐந்து (5) நிமிடத்தினுள் தொடர்ச்சியாக வாசிக்கப்படும் பந்தியொன்றை நிமிடத்துக்கு 80 சொற்கள் என்ற வேகத்தில் சுருக்கெழுத்திட்டு அக்குறிப்பை நிமிடத்துக்கு 8 சொற்கள் என்ற வேகத்தில் தட்டெழுத்துச் செய்தல் வேண்டும் ;

மற்றும்

(ஆ) நிமிடத்துக்கு 40 சொற்கள் என்ற வேகத்தில் 20 நிமிடங்கள் தட்டெழுத்து செய்தல்

13. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- பரீட்சை நடாத்தப்படும் திகதிக்கு ஒரு கிழமைக்கு முன்பு கிடைக்கதக்கவாறு பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். அனுமதி அட்டை இன்றி பரீட்சைக்கு தோற்ற அனுமதி வழங்கப்பட மாட்டாது. பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள், பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் பகிர்ந்தளிப்பு செய்யப்பட்டவுடன் அது குறித்து பத்திரிகையில் அறிவிப்பொன்று வெளியிடப்படும். அவ் அறிவிப்பு வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்பும் பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின், அது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அறிவிக்க வேண்டும். உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம், பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ஆகியவற்றின் நிழற்படப் பிரதிகள், பதிவுத்தபால் பற்றுச்சீட்டு, கொழும்புக்கு வெளியே உள்ள பிரதேசமாயின் அனுமதிப்பத்திரத்தை தொலைநகல் செய்வதற்காக ஒரு தொலைநகல் இலக்கத்தையும் உள்ளடக்கியதான உங்களது கோரிக்கைக்கடிதத்துடன் சேர்த்து விபரம் கோருவது நற்பயனளிக்கும்.

14. பரீட்சார்த்தி அவரது கையொப்பத்தினை அரச பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பகிரங்க நொத்தாரிசு, முப்படையின் அதிகாரிகள், பொலிஸ் சேவை வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது ரூபா 2,92,080 அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த சம்பளத்தினைப் பெறும் அரச அல்லது மாகாண சேவையில் உள்ள நிரந்தரப் பதவிநிலை உத்தியோகத்தர் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

15. பரீட்சை நடாத்துவது தொடர்பில் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்ட ஒழுங்குகளை மீறும் பட்சத்தில் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படவேண்டி ஏற்படும்.

16. இப்பரீட்சையை நடாத்துவது, நியமனம் பெற்றுக் கொடுத்தல் மற்றும் ஏனைய சகல விடயங்கள் தொடர்பிலும் இறுதித் தீர்மானம் சட்டமா அதிபருக்கு உரியதாகும்.

**குறிப்பு**.- இவ்வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் மூலமாகவும் வெளியிடப் பட்டிருப்பதுடன் ஏதேனும் வித்தியாசங்கள் காணப்படின் சிங்கள மொழி மூலம் காணப்படும் அறிவித்தலே ஏற்புடையதாகும் என்பதை தயவுசெய்து கருத்தில் கொள்ளவும்.

ஜயன்த ஜயசூரிய,
சனாதிபதி சட்டத்தரணி,
சட்டமா அதிபர்.

சட்டமா அதிபர் திணைக்களம்,
கொழும்பு 12,
2016, யூலை 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**சட்டமா அதிபர் திணைக்களத்தின் சுருக்கெழுத்தாளர் (III) ஆம் வகுப்புக்கு சேர்த்துக்கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை - 2016**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 1
தமிழ் - 2
ஆங்கிலம் - 3
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

1\. 1.1 பெயர் (முதலெழுத்துக்கள் இறுதியில் வரக்கூடியவாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(உ-ம் : PERERA A.B.C.)

1.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

1.5 பால் : ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

2\. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.3 பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி :

(i) சிங்களத்தில்/ தமிழில் :----.
(ii) ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில் :----.

2.4 தொலைபேசி இலக்கம் :----.

3\. 3.1 விவாக நிலை :
திருமணமானவர்-2
திருமணமாகாதவர்-1
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு மாதம் திகதி

3.3 விண்ணப்ப கடைசித் திகதியன்று வயது :

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

3.4 நீங்கள் இலங்கைப் பிரசையாவது பிறப்புரிமையாலா ? பதிவுசெய்ததன் மூலமாகவா ? :----.

4\. கல்வித் தகைமைகள் :

4.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை :

(i) பரீட்சை வருடமும் மாதமும் :
வருடம் :----. மாதம் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) பெறுபேறுகள் :----.

| பாடங்கள் | சித்தியடைந்த தரம் |
|---|---|
| 1. .................................. | ................ |
| 2. .................................. | ................ |
| 3. .................................. | ................ |
| 4. .................................. | ................ |
| 5. .................................. | ................ |
| 6. .................................. | ................ |
| 7. .................................. | ................ |
| 8. .................................. | ................ |
| 9. .................................. | ................ |
| 10. .................................. | ................ |

4.2 க. பொ. த. (உ. த.) பரீட்சை தொடர்பான விபரம் :

(i) பரீட்சை வருடமும் மாதமும் :
வருடம் :----. மாதம் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) பெறுபேறுகள் :----.

| பாடங்கள் | சித்தியடைந்த தரம் |
|---|---|
| 1. .................................. | ................ |
| 2. .................................. | ................ |
| 3. .................................. | ................ |
| 4. .................................. | ................ |

5. தொழில் தகைமைகள் :

| பாடநெறியின் பெயர் | கால வரையறை | நிறுவனம் |
|---|---|---|
| | | |

6. அனுபவம் :

| பயிற்சிபெற்ற அல்லது பணியாற்றிய நிறுவனத்தின் பெயர் | கால வரையறை |
|---|---|
| | |

7. நீர் ஏதாவது குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றின் மூலம் தண்டனை விதிக்கப்பட்டுள்ளீரா ?

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

(குறித்த கூட்டில் ✓ அடையாளமிடுக)

அவ்வாறு தண்டனை பெறப்பட்டிருப்பின் அது என்ன குற்றம் தொடர்பாக எந்த நீதிமன்றத்தினால் என்ன தண்டனை பெறப்பட்டது என்பது தொடர்பில் விபரம் சமர்ப்பிக்கவும்.

8. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரம் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட இலங்கை வங்கி கிளையின் பெயர் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்திய தொகை :----.

| பற்றுச்சீட்டை அகற்ற முடியாதவாறு இங்கு ஒட்டவும். |
|---|

9. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் சமர்ப்பிக்கப் பட்டுள்ள விபரங்கள் நான் அறிந்தவகையில் உண்மையானதும் வழுவற்றதும் என கண்ணியத்துடன் பிரஸ்தாபித்து நிற்கின்றேன். இங்கு ஏதாவதொரு தகவல் பூர்த்தியாக்கப்படாமல் அல்லது பிழையாக நிரப்பப்பட்டதன் காரணமாக ஏற்படும் நஷ்டங்களை பொறுத்துக்கொள்வதற்கு நான் உடன்படுகின்றேன். மேலும், இங்குள்ள எல்லா தகவல்களையும் சரியாக நிரப்பியுள்ளேன் என உறுதியுரைக்கின்றேன்.

(ஆ) பரீட்சை நடாத்துதல் தொடர்பில் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைவாக செயற்படுவதற்கும், இவ்வரையறைகளுக்கு அமைவாக நான் தகுதியற்றவர் என வெளிப்படுமிடத்து பரீட்சைக்கு முன்பு அல்லது பரீட்சைக்குப் பின்பு எனது வேலை நிலையை இரத்துச் செய்வதற்கு எடுக்கப்படும் தீர்மானத்தை அங்கீகரிப்பதற்கு நான் உடன்படுகிறேன்.

(இ) என்னால் செய்யப்பட்ட இவ்வாக்குமூலங்கள் பொய் யானவை என நிரூபிக்கப்பட்டால் பதவி நியமனத்தை பெற்றுக்கொள்ள தகைமையற்றவராவதுடன், நியமனத்தைப் பெற்றுக்கொண்ட பின்பும் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் கீழ்படிகின்றேன் என்பதையும் நான் அறிவேன்.

(ஈ) இங்கு குறிப்பிட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்பு மாற்றம் செய்ய மாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.-

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் .................. .................................... திரு./ திருமதி/ செல்வியை நான் தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் என்பதையும் அவர் ........................................................ ஆந் திகதி என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரது கையொப்பமும்
பதவி முத்திரையும்.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

11. திணைக்களத் தலைவரின் உறுதிப்படுத்தல்.- (தற்போது அரச சேவையில் பதவி வகிப்பவர்களுக்கு மாத்திரம் ஏற்புடையது.)

................................................................ திரு./ திருமதி/ செல்வி ................................................... சேவையில் உள்ள ............................................................... பதவியை வகிக்கும் அலுவலர் எனவும், அவர் மேற்குறிப்பிட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். இப்பதவிக்கு அவர் தேர்ந்தெடுக்கப்படின் ................. ............................................. சேவையிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/ முடியாது என்பதையும் மேலும் அறிவித்துக்கொள்கிறேன்.

..................................,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

திகதி :----.

7-1136

**காணி அமைச்சு**

*நில அளவைத் திணைக்களம்*

### நில அளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் இலங்கை தொழில்நுட்ப சேவைசார் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை

1. நில அளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் இலங்கை தொழில்நுட்பச் சேவைசார் கீழ்க்காணும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 ஆட்சேர்ப்புக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள பதவிகள் :

**அட்டவணை இல. 1**

| *தொடர் இல.* | *பதவிப் பெயர்* | | *நிரப்பப் படவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை* | *ஆட் சேர்ப்புத் தரம்* |
|---|---|---|---|---|
| 1 | கட்டிட மேற்பார்வையாளர் | கொழும்பு தலைமை அலுவலகத்தில் மாத்திரமே வெற்றிடம் நிலவும் பதவிகளாகும். சேவைக் காலம் முழுவதும் தலைமை அலுவலகத்திலேயே சேவையாற்ற வேண்டும். | 01 | III ஆம் தரம் |
| 2 | போக்குவரத்து உத்தியோகத்தர் | | 01 | III ஆம் தரம் |

1.2 பதவிக்குரிய கடமைகளின் தன்மை :

**அட்டவணை இல. 2**

| *தொடர் இல.* | *பதவிப் பெயர்* | *கடமைகளின் தன்மை/ பிரதான அலுவல்கள்* |
|---|---|---|
| 1 | கட்டிட மேற்பார்வையாளர் | 1. வருடாந்த கட்டிடப் பராமரிப்புத் திட்டத்தைத் தயாரித்தல்<br>2. கட்டிடப் பராமரிப்புச் செயல்முறையை முகாமைத்துவத்திற்கு முன்மொழிதல்<br>3. ஊழியர் குழுக்களைக் கண்காணித்தல்<br>4. பராமரிப்புகளுக்குத் தேவையான மூலப் பொருட்களையும், உபகரணங்களைக் களஞ்சியப்படுத்தலும், முகாமையும்<br>5. கொடுப்பனவுகளுக்காக அளவீடு செய்தலும், பரிந்துரைகளைப் பெறுதலும் |
| 2 | போக்குவரத்து உத்தியோகத்தர் | 1. திணைக்களத்துக்குச் சொந்தமான வாகனங்களை ஓட்டுவதற்குத் தகுந்த நிலைமையில் பேணிச் செல்வதற்குத் தேவையான தொழில்நுட்பத் தகவல்களை வழங்குதல்<br>2. பழுதுபார்ப்புகளுக்குத் தேவையான பரிந்துரைகளையும் தொழில்நுட்ப அறிக்கைகளையும் பெற்றுத் தருதல்.<br>3. பழுதுபார்ப்புகளின் பின் வாகனங்களது ஓட்ட நிலைமையைப் பரிசீலித்தல், வாகனப் பராமரிப்புப் பற்றி பரிசீலித்தல்<br>4. சாரதிகளுக்கு ஆலோசனை வழங்குதல்<br>5. வாகன விபத்துக்களின்போது உடனே பரிசோதித்து அறிக்கை சமர்ப்பித்தல், பாவனைக்குதவாத பழுதடைந்த வாகனங்களைக் கழித்து விடுதல் போன்ற நடவடிக்கைகள்<br>6. சுற்றாடல் தூய்மைசார் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள வாகனங்களைத் தயாராக்குதல். |

2. நியமிக்கப்படுவோர் தொகையும், நியமனத் திகதியும் நியமிப்பு அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்கள் அனைத்தையுமோ அல்லது அதில் ஏதேனுமொரு தொகையையோ நிரப்பாமலிருக்க நியமிப்பு அதிகாரிக்கு அதிகாரமுண்டு.

*3.* ***சம்பளங்கள் :***

**அட்டவணை இல.** *3*

| *தரம்* | *சம்பளப் படிமுறை* | *ஆரம்ப மாதச் சம்பளம்* |
|---|---|---|
| III ஆம் தரம் | மாதாந்தம் ரூபா 31,040 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 10 x 750 - ரூபா 57,550 (MN - 3 - 2016) | ரூபா 31,040 (அ. சு. நிரூபம் இல. 03/ 2016 இன் பிரகாரம் 2017.01.01 ஆந் திகதிக்கு உரிய சம்பளம் ரூபா 21,419) |
| II ஆம் தரம் | மாதாந்தம் ரூபா 31,040 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 10 x 750 - ரூபா 57,550 (MN - 3 - 2016) (சம்பளப்படி 12 இல் இருந்து ஆரம்பம் | ரூபா 36,150 (அ. சு. நிரூபம் இல. 03/ 2016 இன் பிரகாரம் 2017.01.01ஆந் திகதிக்கு உரிய சம்பளம் ரூபா 24,951) |
| I ஆம் தரம் | மாதாந்தம் ரூபா 31,040 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 10 x 750 - ரூபா 57,550 (MN - 3 - 2016) (சம்பளப்படி 23 இல் இருந்து ஆரம்பம் | ரூபா 43,480 (அ. சு. நிரூபம் இல. 03/ 2016 இன் பிரகாரம் 2017.01.01 ஆந் திகதிக்கு உரிய சம்பளம் ரூபா 30,019) |

*4.* ***நியமன நியதிகள்.-*** இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். நியமனம் மூன்றாண்டு கால தகுதிகாண் நிலைக்கு உள்ளாக்கப்படும். பதவிகள் கொழும்பு தலைமை அலுவலகத்தில் நிலவும் பதவிகள் என்பதால் சேவைக்காலம் முழுவதும் தலைமை அலுவலகத்திலேயே சேவையாற்ற வேண்டும். நியமனங்கள் இந்த வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவையின் பதவி நியமனங்களுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும்.

5. ***தகைமைகள் :***

*5.1 அடிப்படைத் தகைமைகள் :*

(அ) ஓர் இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் ;

(ஆ) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிப்பவர்களுக்கு இவ்வயர் வயதெல்லை ஏற்புடையதல்ல.)

*5.2 கல்வித் தகைமைகள் :*

(அ) மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஏதேனும் ஒரு பாடம் உள்ளடங்கலாக நான்கு (4) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் மொத்தம் (6) பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு சித்தியடைந்திருக்க வேண்டும் ;

அத்துடன்

(ஆ) இணைந்த கணிதம், பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் ஆகிய பாடங்களில் இரண்டு பாடங்கள் உட்பட மூன்று (3) விஞ்ஞானப் பாடங்களில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (சாதாரண பொதுப் பரீட்சை நீங்கலாக) ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

*5.4 தொழில்சார் தகைமைகள் :*

கட்டிட மேற்பார்வையாளர் மற்றும் போக்கு வரத்து உத்தியோகத்தர் பதவிகளுக்கு விண்ணப் பிப்பவர்கள் மேற்காணும் 5.1 மற்றும் 5.2 தகைமைகளுக்கு மேலதிகமாகக் கீழ்க்காணும் தொழில்சார் தகைமைகளில் ஒன்றையும் கொண்டிருத்தல் வேண்டும் :

(1) கட்டிட மேற்பார்வையாளர் :

(அ) அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் தேசிய தொழில்நுட்ப தகைமைச் சான்றிதழ் (சிவில்) மூன்றாண்டு பகுதி நேரப் பயிற்சிப் பாடநெறியைப் பயின்றிருத்தல் ;

(ஆ) தொழில்துறை சார்ந்ததாய் தேசிய தொழில் தகைமை (NVQ) 5 அல்லது 6 ஆம் மட்டத் தகைமைகளைப் பூரணப்படுத்தியிருத்தல்.

(2) போக்குவரத்து உத்தியோகத்தர் :

(அ) அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றில் தேசிய தொழில்நுட்ப தகைமைச் சான்றிதழ் (இயந்திரவியல்) மூன்றாண்டு பகுதி நேரப் பயிற்சிப் பாடநெறி பயின்றிருத்தல் ;

(ஆ) தொழில் துறை சார்ந்ததாய் தேசிய தொழில் தகைமை (NVQ) 5 அல்லது 6 ஆம் மட்டத் தகைமைகளைப் பூரணப்படுத்தியிருத்தல்.

மேலே (1) மற்றும் (2) இல் குறிப்பிடப் பட்டுள்ள தொழில்சார் தகைமைகளைப் போக்குவரத்து உத்தியோகத்தர்

பதவிக்காக இயந்திரவியல் துறையிலும், கட்டிட மேற்பார்வையாளர் பதவிக்காக சிவில் துறையிலும் கீழ்க்காணும் நிறுவனம் ஒன்றிலிருந்து பெற்றிருத்தல் வேண்டும் :

(அ) மொறட்டுவ பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹார்டி நிறுவனத்தால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி ;

அல்லது

(ஆ) தேசிய பயிலுநர் மற்றும் தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா பாட நெறி ;

அல்லது

(இ) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா பாடநெறி ;

அல்லது

(ஈ) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி ;

அல்லது

(உ) இலங்கைப் பொறியியல் நிறுவனத்தால் நடத்தப்படும் பரீட்சையின் I ஆம் பாகத்தை வெற்றிகரமாகப் பூரணப்படுத்தியிருத்தல் ;

அல்லது

(ஊ) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிட்ட தொழில்நுட்பச் சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்கள் ஆகியவற்றை விசாரித்துக் கருத்தறிந்த பின் மேற்காணும் தொழில்நுட்பத் தகைமையுடனும் சகலவிதத்திலும் சமமானதென பொது நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்படும் வேறு தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

5.4 *உடல்சார் தகைமைகள்*.- ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றவும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றவும், போதிய உடல் ரீதியானதும், மனோரீதியானதுமான தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

**குறிப்பு**.- சகல விண்ணப்பதாரர்களும் பதவிக்குரிய தகைமைகள் அனைத்தையும் விண்ணப்ப முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூரணப்படுத்தியிருத்தல் கட்டாயமானதாகும்.

6. **பொய்யான தகவல்களை வழங்குதல்**.- இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எவரேனும் விண்ணப்பதாரருக்கு தகைமைகள் இல்லையென்பது வெளிப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறும் பொழுதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படலாம். சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்னரெனினும் விண்ணப்பதாரர் ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு தகவலை அவர் அது பிழையெனத் தெரிந்துகொண்டே சமர்ப்பித்திருந்தாலோ அல்லது ஏதேனுமொரு முக்கிய தகவலை வேண்டுமென்றே மறைத்திருப்பது தென்பட்டாலோ அவரை அரச சேவையிலிருந்து நீக்க இடமுண்டு.

7. **பரீட்சை முறை**.- இப்பரீட்சை இரண்டு பாடங்கள் கொண்டதோர் எழுத்துப் பரீட்சையாகும். இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பித்த மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

| பாடம் | பெறக்கூடிய முழுப்புள்ளிகளின் அளவு | சித்தி எய்தப் பெற வேண்டிய ஆகக் குறைந்த புள்ளியின் வீதம் | காலம் |
|---|---|---|---|
| I நுண்ணறிவு | 100 | 50% | 1 மணித்தியாலம் |
| II தொழில்நுட்ப வினாத்தாள் | 100 | 50% | 2 மணித்தியாலங்கள் |

7.1 *பாட விதானம்* :

(i) நுண்ணறிவு.- பரீட்சையின் பகுத்தறிவுபூர்வமாகச் சிந்திக்கும் ஆற்றல், ஆய்வுத்திறன் மற்றும் தீர்மானம் எடுக்கும் ஆற்றல் என்பவற்றைப் பரீட்சிக்கும் நோக்குடனான வினாக்களுடன் உருவாக்கப்பட்டதாய் அமையும் ;

(ii) *தொழில்நுட்ப வினாத்தாள் -*
கணிதம் :
அட்சர கணிதம் (சமனிலிகள், மாறிகள், தொடர்கள், மடக்கைகள்)
திரிகோணமானம் (சமவலுச் சமன்பாடுகள், முக்கோணங்களைத் தெளிவாக்குதல்)
புள்ளிவிபரவியல் (இடை, ஆகாரம், நியம விலகல், நிகழ்தகவு)

பௌதீகவியல் :
ஒளியும் ஒளியியலும் (தெறிவும், முறிவும், சமதள ஆடிகள், வளைந்த பரப்புக்கள், அரியம், கண்ணாடி வில்லைகள், ஒளியியல் சூத்திரம், நுணுக்குக்காட்டிகள், தொலைகாட்டிகள்), நியுற்றனின் நிலையியக்கவியல் (எண்ணளவுகளும் காவிகளும், நியுற்றனின் இயக்க விதிகள், இயங்குவிசை)

நானாவித விடயங்கள் :
புவிச்சரிதவியலின் அறிமுகம் (பூமியின் வடிவம், பிரதேசவியல் போன்றன) திண்மப் பதார்த்தங்களின் கோணப்பார்வை, எறியங்களின் பெறுமதி, நிலஅளவைத் திணைக்களத்தால் தயாரிக்கப்படும் தேசப்படங்கள்.

8. **தெரிவு முறை :**

8.1 நிலஅளவையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய அதிகூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர் களிடையே நிரப்புவதற்கு உத்தேசிக்கப்படும் வெற்றிட எண்ணிக்கைக்குச் சமனான விண்ணப்பதாரர்களது தொகை பெறுபேறுகளின் அடிப்படையில் திறமை ஒழுங்கில் வரிசைப்படுத்தப்பட்டு இரண்டாவதாக பதவிகளுக்கான விருப்பத் தெரிவு வரிசைக் கிரமம் கவனத்தில் கொள்ளப்பட்டு இவ்விரண்டுக்கும் அமைவாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

8.2 தகைமைகளை உறுதிப்படுத்திக்கொள்ள நேர்முகப் பரீட்சை ஒன்று நடாத்தப்படுவதுடன், நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

9. **ஆட்சேர்ப்பு**.- பயிற்றுவிக்கும் தரத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவோர் தியத்தலாவை அளவையியல் படமாக்கல் நிறுவனம் மூலம் நடாத்தப்படும் இரண்டு வருட தொழில்நுட்பவியலாளர் டிப்ளோமா பாடநெறியை வெற்றிகரமாய் பூரணப்படுத்தியபின் தொழில்நுட்பச் சேவையில் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

10. **விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்தலும் சமர்ப்பித்தலும் :**

(அ) இவ்வறிவித்தலின் முடிவில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப 21 x 29 செ. மீ. (ஏ4) அளவுத்தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பதாரர்கள் தாமாகவே விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டும். இல. 1 முதல் 4 வரையான தலைப்புக்கள் 1 ஆம் பக்கத்திலும், இல. 4.1 முதல் 10.1 வரையான தலைப்புக்கள் 2 ஆம் பக்கத்திலும், இல. 10.2 முதல் 11.1 வரையான தலைப்புக்கள் 3 ஆம் பக்கத்திலும், இல. 12 முதல் 14 வரையான தலைப்புக்கள் நான்காம் பக்கத்திலும், இல. 15 ஆம் தலைப்பு ஐந்தாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஆ) தற்போது அரச மற்றும் மாகாண அரச சேவையின் கீழ் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாகவும், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின்கீழ் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் அவற்றைத் தமது நிறுவனங் களின் தலைவர்கள் ஊடாகவும் உரிய தினத்திற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவங்கள் தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஈ) உரிய மாதிரி விண்ணப்பத்திற்கு அமைவாக இல்லாத, உரிய தினத்திற்கு முன் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத மற்றும் சரியாகப் பூர்த்திசெய்யப்படாமல் குறைபாடுகளுடன் கூடிய விண்ணப்பங்கள் யாவும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் விண்ணப்பங்களை நிரப்பாமையினால் நிகழும் விளைவுளை விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியொன்றைத் தம்மிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் பரீட்சை அறிவித்தலுடன் காணப்படும் விண்ணப்பப்படிவத்துடன் ஒத்திருக்கின்றதா என விண்ணப்பதாரர் கவனித்தல் வேண்டும். இல்லையேல் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

(உ) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதென அறிவிக் கப்பட மாட்டாது. தபாலில் காணாமல் போகும் விண்ணப்பங்கள் தொடர்பில் செய்யப்படும் எதுவித முறைப்பாடுகளும் கவனத்தில்கொள்ளப்பட மாட்டாது.

**முக்கிய குறிப்பு**.- பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பித்த பரீட்சை நிலையத்தினைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

10.1 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தகைமைகள் உடையவர்கள் மாத்திரமே விண்ணப்பித்திருப்பார்கள் எனும் முன் அனுமானத்தில் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி உரிய தினத்தன்றோ அல்லது அத்தினத்திற்கு முன்னரோ விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரர்களுக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற நிலஅளவையாளர் நாயகத்தினால் இடமளிக்கப்படும். போட்டிப்

பரீட்சைக்குத் தோற்ற அனுமதி அட்டை வழங்கப்படுவது விண்ணப்பதாரர் இப்பரீட்சைக்குத் தோற்றவோ அல்லது இப்பதவிக்கான தகைமை உள்ளவர் என ஏற்றுக்கொள்ளப் பட்டதாகவோ கருதப்படக் கூடாது. விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலுக்கமைவாகத் தகைமைகள் கொண்டவரெனப் பரிசீலிக்கும் வேளையில் தேவையான தகைமைகள் இல்லையென வெளிப்படுமானால் அவரது பரீட்சார்த்தி உரிமை பறிக்கப்படும்.

10.2 விண்ணப்பப்படிவம் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தொழில்நுட்ப சேவைகள் பதவிக்கு ஆட்சேர்ப்பு" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

10.3 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், நொத்தாரிசு, முப்படைகளிலும் ஆணையிடும் தரத்தில் உள்ள அதிகாரிகள், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ள ஒரு பதவியைக் கொண்டுள்ள உத்தியோகத்தர் அல்லது பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. 06/2006 இன் தரப்படுத்தலுக்கமைய மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட மட்டங்களிலுள்ள ஒரு நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் ஆகியோரில் எவரேனும் ஒருவரால் உறுதிப்படுத்த வேண்டும்.

11. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் 800 ரூபா ஆகும். இத்தொகையைக் கொழும்பு 5, கிருல வீதி, இல. 150 இல் அமைந்துள்ள நிலஅளவைத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் உள்ள காசாளர் பிரிவில் அல்லது எந்தவொரு மாவட்ட நிலஅளவை அலுவலகத்திலோ அல்லது தியத்தலாவை அளவையியல் படமாக்கல் நிறுவனத்திலோ செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்பிரதியொன்றினை எதிர்காலத் தேவைக்காக தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளச்செலுத்தப்பட மாட்டாது என்பதுடன் காசுக்கட்டளை அல்லது காசோலை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. பற்றுச்சீட்டு இன்றி சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

12. **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்**.- பூரணப்படுத் தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2016.08.29 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கீழ்வரும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாய் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நில அளவையாளர் நாயகம்,
நிலஅளவைத் திணைக்களம்,
த. பெ. இல. 506,
கொழும்பு.

13. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- பரீட்சைக்குத் தோற்றும் ஒரு பரீட்சார்த்தி அப்பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கப்பட மாட்டாது. ஒரு பரீட்சார்த்தி தமக்கென குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

14. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சை மண்ட பத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பப்பத்திரம் தொடர்பாகவும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் பரீட்சார்த்திகள் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்கெனப் பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

15. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயமிருப்பின் அது குறித்து நிலஅளவையாளர் நாயகத்தினால் தீர்மானிக் கப்படும். சகல விண்ணப்பதாரர்களும் இவ்வர்த்தமானியில் காணப்படும் பொதுவான பரீட்சை விதிமுறைகளுக்கு அமைவாக நடந்துகொள்ளக் கட்டுப்பட்டுள்ளனர்.

பீ. எம். பீ. உதயகாந்த,
நிலஅளவையாளர் நாயகம்.

நிலஅளவைத் திணைக்களம்,
கொழும்பு 5.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**காணி அமைச்சு**

நிலஅளவைத் திணைக்களம்

**நில அளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் தொழில்நுட்ப சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை**

(அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்)

1. பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்கும் பரீட்சை நிலையம் :

| | |
|---|---|
| கொழும்பு | |
| தியத்தலாவை | |
| அநுராதபுரம் | |

பரீட்சைக்குத் தோற்ற உத்தேசிக்கும் நிலையத்தின் பெயர் குறித்த கூட்டினுள் ✓ அடையாளத்தையும், ஏனைய இரு கூடுகளுக்குள்ளும் x அடையாளத்தையும் இடவும்.

2. பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழிமூலம் : (சிங்களம்-S, தமிழ்-T, ஆங்கிலம்-E)
(தரப்பட்டுள்ள கூட்டினுள் குறியீட்டை இடவும்.)

3. ஆட்சேர்ப்புக்கான பதவிகளிடையே நியமனம் பெற விரும்பும் பதவிகளின் ஒழுங்குவரிசை மிகக் கூடிய விருப்பமுள்ள பதவிக்கு இலக்கம் 1 ஐயும் விருப்பம் குறையும் ஒழுங்குவரிசைக்கமைய மற்றைய பதவிக்கு 2 ஐயும் குறிப்பிடவும்.

| பதவிப் பெயர் | விருப்பு இல. |
|---|---|
| (1) கட்டிட மேற்பார்வையாளர் | |
| (2) போக்குவரத்து உத்தியோகத்தர் | |

4. முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./ திருமதி/ செல்வி) : ----.
தமிழில் :----.
ஆங்கிலத்தில் :----.

4.1 முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் (தெளிவான எழுத்துக்களில்) :----.
தமிழில் :----.
ஆங்கிலத்தில் :----.

5. தேசிய அடையாள அட்டை இல. :----.

6. பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

6.1 விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது:

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

7. பால் : (ஆண் - M, பெண் - F) ☐
(தரப்பட்டுள்ள கூட்டினுள் குறியீட்டை இடவும்.)

8. நிரந்தர முகவரி (தெளிவான எழுத்துக்களில்) :----.

8.1 முகவரி கொடுக்கப்பட்ட நிர்வாக மாவட்டம் (அட்டவணை 1 ஐப் பார்க்கவும்) :

மாவட்ட இலக்கம் ☐

மாவட்டத்தின் பெயர் ☐

8.2 எப்போதிலிருந்து அம்மாவட்டத்தில் வசிக்கின்றீர்கள் ? :----.

9. தொலைபேசி இலக்கம் :

நிலையான :----.
கையடக்க :----.

10. கல்வித் தகைமைகள்:

10.1 க.பொ.த. (சா.த) பரீட்சை பற்றிய விபரங்கள் : முதலாவது அமர்வு:

(i) பரீட்சைக்கு தோற்றிய ஆண்டும் மாதமும் : ----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) சித்தியெய்திய பாடங்கள் :

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

**குறிப்பு**.- பெறப்பட்டுள்ள அதியுயர் தரத்திலிருந்து தொடங்கி தர ஒழுங்கில் பாடங்களைக் குறிப்பிடவும்.

10.2 க.பொ.த. (சா.த.) பரீட்சை பற்றிய விபரங்கள்: இரண்டாவது அமர்வு:

(i) பரீட்சைக்கு தோற்றிய ஆண்டும் மாதமும் : ----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) சித்தியெய்திய பாடங்கள் :

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

**குறிப்பு**.- பெறப்பட்டுள்ள அதியுயர் தரத்திலிருந்து தொடங்கி தர ஒழுங்கில் பாடங்களைக் குறிப்பிடவும்.

10.3 க. பொ. த. (உ. த.) பரீட்சை பற்றிய விபரங்கள்:

(i) பரீட்சைக்கு தோற்றிய ஆண்டும் மாதமும் : ----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) சித்தியெய்திய பாடங்கள் :

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

11. நீர் குற்றச் செயலொன்றிற்கு எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீரா? :-

ஆம் ☐ இல்லை ☐

11.1 ஆம் எனில் அக்குற்றம் பற்றிய விபரங்களைத் தருக :----.

12. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரங்கள் ? :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்திய தொகை :----.

| பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கே ஒட்டவும். |
|---|

13. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானதும் சரியானதும் என்று நான் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்டுள்ள இப்பிரகடனம் பொய்யானதென உறுதியாகுமிடத்து நான் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு தகுதியற்றவனாவேன் என்றும் நியமனம் பெற்றபின் அவ்வாறு உறுதியாகுமிடத்து சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என்றும் நான் அறிவேன்.

(இ) .......................... ரூபா செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டு உரிய இடத்தில் ஒட்டப்பட்டுள்ளது.

(ஈ) மேலும் பரீட்சை நடத்துதல் தொடர்பான நிலஅளவையாளர் நாயகத்தின் விதிகளுக்கும் சட்ட ஒழுங்குகளுக்கும் கட்டுப்படுவதாகவும் உறுதிப்படுத்துகிறேன்.

(உ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விடயத்தையும் பின்னர் மாற்ற மாட்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

14. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப் படுத்துதல் :**

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ....................................................................... ....... என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் நன்கு அறிந்துள்ளேன் எனவும் அவர் .................. ஆம் திகதி என் முன்னிலையில் மேலே 13 ஆம் பந்தியின்கீழ் கையொப்பமிட்டதாகவும் உறுதி செய்கின்றேன்.

----.
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்துபவரின் பெயர்:----.
பதவிப் பெயர்:----.
முகவரி----.
(பதவி முத்திரையால் சான்றுப்படுத்தவும்)
திகதி:----.

15. **திணைக்களத் தலைவரின் பரிந்துரை:**
(அரச/ மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்ப தாரர்களுக்கு மாத்திரம்)

15.1 உத்தியோகத்தரின் சுயவிபரக்கோவைக்கமைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் அண்மித்த ஐந்து ஆண்டுகளுக்குள் வேலை, நடத்தை, வரவு திருப்தி யானது/திருப்தியற்றது. சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்துள்ளார்/ உழைக்கவில்லை எந்தவோர் ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உள்ளாகவில்லை/ உள்ளாகியுள்ளார்.

15.2 விண்ணப்பிப்பவர் இந்துப் பதவிக்குத் தெரிவுசெய்யப் பட்டால் தற்போதைய சேவையிலிருந்து விடுவிக்கப் பட முடியும்/ விடுவிக்கப்பட முடியாது. இவ்விண் ணப்பப்படிவத்தினை சிபாரிசு செய்கிறேன்./ செய்யவில்லை.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவி முத்திரை:----.
திகதி:----.

**அட்டவணை 1**

மாதிரி விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இல. 8 இல் குறிக்கப்படும் முகவரி உரித்தாகும் நிர்வாக மாவட்டம் தொடர்பில் இவ்வட்டவணை தொடர்புடையது.

| நகரங்கள்/ மாவட்டங்களின் பெயர்கள் | நகரங்களின்/ மாவட்டங்களின் இலக்கங்கள் |
|---|---|
| 1. கொழும்பு | 01 |
| 2. கம்பஹா | 02 |
| 3. களுத்துறை | 03 |
| 4. கண்டி | 04 |
| 5. மாத்தளை | 05 |
| 6. நுவரெலியா | 06 |
| 7. காலி | 07 |
| 8. மாத்தறை | 08 |
| 9. அம்பாந்தோட்டை | 09 |
| 10. குருநாகல் | 10 |
| 11. புத்தளம் | 11 |
| 12. அநுராதபுரம் | 12 |
| 13. பொலன்னறுவை | 13 |
| 14. பதுளை | 14 |
| 15. மொனராகலை | 15 |
| 16. இரத்தினபுரி | 16 |
| 17. கேகாலை | 17 |
| 18. அம்பாறை | 18 |
| 19. மட்டக்களப்பு | 19 |
| 20. திருகோணமலை | 20 |
| 21. யாழ்ப்பாணம் | 21 |
| 22. வவுனியா | 22 |

7-1192

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.